கருநாடக உயர்கல்வித் தேர்வு வாரியம்

**மல்லேசுவரம், பெங்களூரு**

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு

2019 - 2020

பள்ளி மாணவர்களுக்கு

வினாத்தாள் வடிவமைப்பில்
திருத்தம் பெற்ற மாற்றங்கள்

முதன்மொழி தமிழ்

**குறியீட்டெண் : 10T**

## பத்தாம் வகுப்பு பாடநூலுக்கு ஏற்றவாறு விடைத்தாள் திருத்தும் பணியைச் செம்மைப் படுத்தும் நோக்கில் வினாத்தாளில், சில மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன

## முதன்மைக் குறிப்புகள்

முதன்மொழி தமிழிலும், மற்ற பாடங்களுக்கு உள்ளவாறு, வினாத்தாளின் அமைப்பு, திருத்தப்பட்டுள்ளது. மனப்பாடம் செய்து விடை எழுதும் முறையில் மாற்றம் செய்ய வேண்டி உள்ளது. மனப்பாடம் செய்து எழுதும் விடைகளுக்கான மதிப்பெண் விழுக்காடு கடந்த ஆண்டைவிட குறைக்கப்பட்டுள்ளது. தேர்வு நேரத்தில் பாடப்புத்தகத்தில் உள்ளதை அப்படியே எழுதும் நிலையை மாற்றும் நோக்கத்துடன் 'கருத்துகளுக்கே முதன்மை' (Theme based) என்ற அடிப்படையில் வினாக்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளன. குறு வினாக்களின் எண்ணிக்கை நாற்பது விழுக்காடுகளுக்கும் குறைவாக, அமைந்து, தேர்வு நேரத்தில், வேண்டத்தகாத செயல்களைத் தடுக்கும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், மாணாக்கரின் மொழித் திறமையை மதிப்பிடும் வகையில் விடை எழுதும் முறைக்கு ஏற்ற வண்ணம், விரிவான விடை எழுதும் வினாக்களின் எண்ணிக்கையை மிகுதியாக்கி அமைக்கப்பட்டுள்ளது. அதிக மதிப்பெண்களை எவ்வாறு பெறலாம் என்பதை மட்டுமே, பெற்றோர்களும் மாணவர்களும் நோக்கமாகக் கொண்டுள்ளனர். ஆசிரியர்கள் கூட அதிக மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டுள்ள பாடங்களை மட்டுமே கற்பிக்கிறார்கள் என்ற செய்தியும் எமது கவனத்திற்கு வந்துள்ளது. ஒவ்வொரு பகுதிகளுக்குமான மதிப்பெண்களை நோக்கி அதற்கு ஏற்றவாறு கற்பித்தல் செயலைத் தடுக்கும் நோக்கத்துடன், இம்முறை செய்யுள், உரைநடை, இலக்கணம், கட்டுரை, பழமொழி என்று பகுதியாகப் பிரித்துக் கொண்டு, கருத்து முதன்மை (Theme based) முறையில் மதிப்பெண்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும்,

1. நேரிடை வினாக்கள் குறைக்கப் பட்டுள்ளன.
2. பாடநூலில் இடம் பெற்றுள்ள இலக்கியங்கள், நூல்கள், ஆசிரியர்கள் குறித்த, குறிப்புரைக்கும் வினாக்கள் இடம் பெற்றுள்ளன.
3. முந்தைய வகுப்பில் படித்த இலக்கணங்களில் உள்ள வினாக்களும் இடம் பெற்றுள்ளன.
4. இதுவரை கற்ற தமிழ்க்கல்வி அறிவுச் சோதனை வினாக்களும் இடம் பெற்றுள்ளன.
5. மாணாக்கர்களின் கற்பனை வளம், படைப்புத்திறன், சமூக அக்கறை குறித்து அறியும் வினாக்கள் இடம் பெற்றுள்ளன.

* * * *

# வினாத்தாளில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய மாற்றங்கள்

## முதன்மொழி தமிழ்

மதிப்பெண்கள் : 100 காலம்: 3 மணி

**வினாக்களின் திறன்கள் வாரியான பகுப்பு**

| 2018 - 19 | | | 2019 - 20 | | |
|---|---|---|---|---|---|
| திறன்கள் | விழுக்காடு | மதிப்பெண் | திறன்கள் | விழுக்காடு | மதிப்பெண் |
| நினைவு கூர்தல் | 25 | 25 | நினைவு கூர்தல் | 21 | 21 |
| புரிதல் | 37 | 37 | புரிதல் | 36 | 36 |
| வெளிப்படுத்துதல் | 34 | 34 | வெளிப்படுத்துதல் | 39 | 39 |
| படைப்புத்திறன் | 04 | 04 | படைப்புத்திறன் | 04 | 04 |
| மொத்தம் | 100 | 100 | மொத்தம் | 100 | 100 |

நினைவு கூர்தலுக்கான வினாக்கள் 25 மதிப்பெண்களில் இருந்து 21 ஆக குறைக்கப் பட்டுள்ளன. புரிதல் திறனுக்கான வினாக்கள் 37இல் இருந்து 36 ஆக குறைக்கப்பட்டுள்ளன. வெளிப்படுத்தும் திறனிற்கான மதிப்பெண்கள் 34 இல் இருந்து 39 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன. படைப்புத் திறனில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

## பாடவாரியான வினாக்களின் பகுப்பு நிலை

| 2018 - 19 | | | | 2019 - 20 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **பாடப்பகுப்பு** | விழுக்காடு | மதிப்பெண் | வினாக்கள் | **பாடப்பகுப்பு** | விழுக்காடு | மதிப்பெண் | வினாக்கள் |
| உரைநடை | 34 | 34 | 18 | உரைநடை | 34 | 34 | 14 |
| செய்யுள் | 33 | 33 | 12 | செய்யுள் | 33 | 33 | 14 |
| இலக்கணம்/ பழமொழி | 33 | 33 | 20 | இலக்கணம்/ பழமொழி | 33 | 33 | 17 |
| **மொத்தம்** | 100 | 100 | 50 | **மொத்தம்** | 100 | 100 | 45 |

பாடவாரியான வினாக்களின் பகுப்பு நிலையில், விழுக்காட்டிலும், மதிப்பெண்ணிலும் மாற்றம் இல்லை. வினாக்களின் எண்ணிக்கை ஐம்பதில் இருந்து நாற்பத்து ஐந்தாக குறைக்கப்பட்டது. அனைத்து பாடங்களில் இருந்தும் வினாக்கள் இடம்பெறும்.

## வினா வகைகளுக்கான மதிப்பெண் பகிர்வு

| | **2018 - 19** | | | | **2019 - 20** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வினா வகை | வினாக்கள் | மதிப்பெண் | மொத்த மதிப்பெண் | நேரம் | வினாக்கள் | மதிப்பெண் | மொத்த மதிப்பெண் | நேரம் |
| தேர்ந்தெடுத்தல் | 10 | 01 | 10 | 20நிமி | 6 | 1 | 6 | 15நிமி |
| தொடர்பு படுத்தல் | 4 | 01 | 4 | 5நிமி | 4 | 1 | 4 | 5நிமி |
| ஒரு தொடரில் விடை தருக | 11 | 01 | 11 | 15நிமி | 7 | 1 | 7 | 15நிமி |
| நெடு வினா I | 09 | 02 | 18 | 40நிமி | 10 | 2 | 20 | 35நிமி |
| நெடு வினா II | 09 | 03 | 27 | 40நிமி | 11 | 3 | 33 | 45நிமி |
| நெடு வினா III | 05 | 04 | 20 | 25நிமி | 05 | 4 | 20 | 25நிமி |
| கட்டுரை/கடிதம் | 02 | 05 | 10 | 20நிமி | 02 | 5 | 10 | 25நிமி |
| மொத்தம் | 50 | | 100 | 165 +15 | 45 | | 100 | 165 +15 |

**வினாத்தாள் வாசிக்க 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.**

தேர்ந்தெடுத்தல் வினாக்கள் 10இல் இருந்து 6 ஆகக் குறைக்கப் பட்டுள்ளன. தொடர்பு படுத்தல் வினாக்களில் எந்த மாற்றமும் இல்லை. ஒரு தொடரில் விடை தருக வினாக்கள் 11இல் இருந்து 7 ஆக அதிகரிக்கப் பட்டுள்ளன. நெடுவினா II வினாக்கள் 9 இல் இருந்து 11 ஆக அதிகரிக்கப் பட்டுள்ளன. நெடுவினா III மற்றும் கட்டுரை / கடிதம் வினாக்களின் எண்ணிக்கையில் மாற்றம் இல்லை.

## வினாக்களின் கடினநிலை

| 2018 - 19 | | | 2019 - 20 | | |
|---|---|---|---|---|---|
| மிக எளிய நிலை | எளிய நிலை | கடின நிலை | மிக எளிய நிலை | எளிய நிலை | கடின நிலை |
| 30% | 50% | 20% | 30% | 50% | 20% |
| **மொத்தம் :** | 100% | | 100% | | |

## வினாக்களுக்கான மதிப்பெண் பகிர்வு

| | 2018 - 19 | | 2019 - 20 | |
|---|---|---|---|---|
| தேர்ந்தெடுத்தல் | 1 மதிப்பெண் கொண்ட 10 வினாக்கள் | 10x1= 10 | 1 மதிப்பெண் கொண்ட 6 வினாக்கள் | 6x1= 6 |
| தொடர்பு படுத்தல் | 1 மதிப்பெண் கொண்ட 4 வினாக்கள் | 4 x 1= 4 | 1 மதிப்பெண் கொண்ட 4 வினாக்கள் | 4x1= 4 |
| ஒரு தொடரில் விடை தருக | 1 மதிப்பெண் கொண்ட 11 வினாக்கள் | 11x1= 11 | 1 மதிப்பெண் கொண்ட 7 வினாக்கள் | 7x1= 7 |
| நெடு வினா I | 2 மதிப்பெண் கொண்ட9 வினாக்கள் | 9x 2= 18 | 2 மதிப்பெண் கொண்ட10 வினாக்கள் | 10x 2= 20 |
| நெடு வினா II | 3 மதிப்பெண் கொண்ட 9 வினாக்கள் | 9x 3= 27 | 3 மதிப்பெண் கொண்ட11 வினாக்கள் | 11x 3= 33 |
| நெடு வினா III | 4 மதிப்பெண் கொண்ட 5 வினாக்கள் | 5x 4= 20 | 4 மதிப்பெண் கொண்ட 5 வினாக்கள் | 5x4= 20 |
| கட்டுரை/கடிதம் | 5 மதிப்பெண் கொண்ட 2 வினாக்கள் | 2x 5= 10 | 5 மதிப்பெண் கொண்ட 2 வினாக்கள் | 2x 5= 10 |
| **மொத்தம்** | 50 | 100 | 45 | 100 |

கருநாடக உயர்கல்வித் தேர்வு வாரியம்

**மல்லேசுவரம், பெங்களூரு**

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு

2019 - 2020

தனித் தேர்வு மாணவர்களுக்கு

வினாத்தாள் வடிவமைப்பில்
திருத்தம் பெற்ற மாற்றங்கள்

முதன்மொழி தமிழ்

**குறியீட்டெண் : 10T**

# தனித்தேர்வு மாணவர்களுக்கு
# வினாத்தாளில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய மாற்றங்கள்

**பொருள்: முதன்மொழி தமிழ்** **குறியீட்டெண் : 10T**

**காலம்: 3.15 மணி** **மதிப்பெண்: 125**

## வினாக்களின் திறன்கள் வாரியான பகுப்பு

| 2018 - 19 | | | 2019 - 20 | | |
|---|---|---|---|---|---|
| திறன்கள் | விழுக்காடு | மதிப்பெண் | திறன்கள் | விழுக்காடு | மதிப்பெண் |
| நினைவு கூர்தல் | 25 | 32 | நினைவு கூர்தல் | 21 | 27 |
| புரிதல் | 37 | 46 | புரிதல் | 36 | 44 |
| வெளிப்படுத்துதல் | 34 | 43 | வெளிப்படுத்துதல் | 40 | 50 |
| படைப்புத்திறன் | 04 | 04 | படைப்புத்திறன் | 03 | 04 |
| மொத்தம் | 100 | 125 | மொத்தம் | 100 | 125 |

## பாடவாரியான வினாக்களின் பகுப்பு நிலை

| 2018 - 19 | | | | 2019 - 20 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **பாடப்பகுப்பு** | விழுக்காடு | மதிப்பெண் | வினாக்கள் | **பாடப்பகுப்பு** | விழுக்காடு | மதிப்பெண் | வினாக்கள் |
| உரைநடை | 34 | 43 | 19 | உரைநடை | 34 | 43 | 19 |
| செய்யுள் | 33 | 41 | 20 | செய்யுள் | 33 | 41 | 16 |
| இலக்கணம்/ பழமொழி | 33 | 41 | 25 | இலக்கணம்/ பழமொழி | 33 | 41 | 24 |
| **மொத்தம்** | 100 | 125 | 64 | **மொத்தம்** | 100 | 125 | 59 |

## வினா வகைகளுக்கான மதிப்பெண் பகிர்வு

**காலம்: 3.15 மணி** **மதிப்பெண்: 125**

| | 2018 - 19 | | | | 2019 - 20 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வினா வகை | வினாக்கள் | மதிப்பெண் | மொத்த மதிப்பெண் | நேரம் | வினாக்கள் | மதிப்பெண் | மொத்த மதிப்பெண் | நேரம் |
| தேர்ந்தெடுத்தல் | 10 | 01 | 10 | 20நிமி | 10 | 01 | 10 | 20நிமி |
| தொடர்பு படுத்தல் | 04 | 01 | 04 | 5நிமி | 05 | 01 | 05 | 5நிமி |
| ஒரு தொடரில் விடை தருக | 16 | 01 | 16 | 20நிமி | 08 | 01 | 08 | 20நிமி |
| நெடு வினா I | 16 | 02 | 32 | 40நிமி | 15 | 02 | 30 | 40நிமி |
| நெடு வினா II | 11 | 03 | 33 | 45நிமி | 14 | 03 | 42 | 45நிமி |
| நெடு வினா III | 05 | 04 | 20 | 25நிமி | 05 | 04 | 20 | 25நிமி |
| கட்டுரை/கடிதம் | 02 | 05 | 10 | 25நிமி | 02 | 05 | 10 | 25நிமி |
| மொத்தம் | 64 | | 125 | 180 +15 | 59 | | 125 | 180 +15 |

**வினாத்தாள் வாசிக்க 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.**

## வினாக்களின் கடினநிலை

| 2018 - 19 | | | 2019 - 20 | | |
|---|---|---|---|---|---|
| மிக எளிய நிலை | எளிய நிலை | கடின நிலை | மிக எளிய நிலை | எளிய நிலை | கடின நிலை |
| 30% | 50% | 20% | 30% | 50% | 20% |
| **மொத்தம் :** | 100% | | 100% | | |

## வினாக்களுக்கான மதிப்பெண் பகிர்வு

| | 2018 - 19 | | 2019 - 20 | |
|---|---|---|---|---|
| தேர்ந்தெடுத்தல் | 1 மதிப்பெண் கொண்ட 10 வினாக்கள் | 10x1= 10 | 1 மதிப்பெண் கொண்ட 10 வினாக்கள் | 10x1= 10 |
| தொடர்பு படுத்தல் | 1 மதிப்பெண் கொண்ட 4 வினாக்கள் | 04x01= 4 | 1 மதிப்பெண் கொண்ட 5 வினாக்கள் | 05x1= 5 |
| ஒரு தொடரில் விடை தருக | 1 மதிப்பெண் கொண்ட 16 வினாக்கள் | 16x1= 16 | 1 மதிப்பெண் கொண்ட 8 வினாக்கள் | 08x01= 8 |
| நெடு வினா I | 2 மதிப்பெண் கொண்ட16 வினாக்கள் | 16x 2= 32 | 2 மதிப்பெண் கொண்ட15 வினாக்கள் | 15x 2= 30 |
| நெடு வினா II | 3 மதிப்பெண் கொண்ட 11 வினாக்கள் | 11x 3= 33 | 3 மதிப்பெண் கொண்ட14 வினாக்கள் | 14x 3= 42 |
| நெடு வினா III | 4 மதிப்பெண் கொண்ட 5 வினாக்கள் | 5x 4 = 20 | 4 மதிப்பெண் கொண்ட 5 வினாக்கள் | 5x4= 20 |
| கட்டுரை/கடிதம் | 5 மதிப்பெண் கொண்ட 2 வினாக்கள் | 02x 05=10 | 5 மதிப்பெண் கொண்ட 2 வினாக்கள் | 2x 5= 10 |
| **மொத்தம்** | 64 | 125 | 59 | 125 |

# கருநாடக உயர்கல்வித் தேர்வு வாரியம்
## மல்லேசுவரம், பெங்களூரு

## மாதிரி வினாத்தாள் - 1

**பொருள்: முதன்மொழி தமிழ்** — **குறியீட்டெண் : 10T**
**காலம்: 3 மணி** — **மதிப்பெண்: 100**

**I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக** **6 x 1 = 6**

**1. செய்யுளுக்கே உரிய சொல்-**

(அ) இடைச்சொல்
(ஆ) உரிச்சொல்
(இ) வடசொல்
(ஈ) திரிசொல்

**2. பிரிக்க முடியாதது பிரித்தால் பொருள் தராதது-**

(அ) அடுக்குத் தொடர்
(ஆ) வேற்றுமைத் தொடர்
(இ) கழிபடர்கிளவி
(ஈ) இரட்டைக்கிளவி

**3. பகைவரின் மதிலை முற்றுகையிடும் போர்முறை -**

(அ) வெட்சி
(ஆ) வஞ்சி
(இ) உழிஞை
(ஈ) நொச்சி

**4. வினைத் தொகை-**

(அ) மண்வளம்
(ஆ) உறுமீன்
(இ) அழுகுரல்
(ஈ) கருங்குயில்

**5. விடுகதைக்கு அமைந்த வேறு பெயர்-**

(அ) வாய்ச்சொல்
(ஆ) அடைமொழி
(இ) பிசிர்
(ஈ) தொடர்கதை

**6. முரண் தொடரைக் குறிப்பிடுக-**

(அ) அழகழகு
(ஆ) அறிதிறன்
(இ) அங்குமிங்கும்
(ஈ) அலையலை

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக: 4 x 1 = 4**

**7.** பாவேந்தர் : பாரதிதாசன்

தேசிய கவி : __________

**8.** மன்னனால் சிறை வைக்கப்பட்டவள்: சீதை

மன்னனால் கோயில் கட்டப்பெற்றவள்: __________

**9.** கடி அரண் - உறுதி

கடி வேல் - __________

**10.** நான்கு சீர்களைக் கொண்டது : அளவடி

ஐந்து சீர்களைக் கொண்டது : __________

**III. ஒரு தொடரில் விடை தருக: 7 x 1 = 7**

**11.** இன்றைக்கு இருக்கும் பெரிய கவலையாக தென்கச்சியார் கூறுவது யாது?

**12.** நமது கல்வி எதனை முழுமையாக்கவில்லை என்கிறார் வைரமுத்து?

**13.** கண்ணகி சேரனின் மலையில் வந்து விண்புக காரணமென்ன?

**14.** யாரிடம் நட்பு கூடாது என்கிறது சிறுபஞ்சமூலம்?

**15.** சங்கத் தலைவியின் முகம் மலரக் காரணமென்ன?

**16.** மருதத்தச்சன் அமைத்தவை யாவை?

**17.** பசுவின் இயல்பு யாது?

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 10 x 2= 20**

18. பாரி என்னும் தமிழ் நாட்டு மன்னன் செய்த செயல் என்ன?

19. பெரிய உள்ளம், தாயுள்ளம் என்று பாரதிதாசன் யாருக்குப் புகழாரம் சூட்டுகின்றார்?

20. இலங்காவித் தீவில் ஆர்ச்சர் மீன் எவ்வாறு பயணிகளை மகிழ்விக்கின்றது?

21. ஆதி புராணத்தில் பம்பன் கூறும் சமணக் கருத்துகள் யாவை?

22. தாயின் உவகையை விளக்கும் குறள் யாது?

23. வண்ண மோதிரம் கண்ட சீதையின் நிலை யாது?

24. அம்மானை ஆடும் பெண்கள் சிவபெருமானின் திருவிளையாடல் குறித்துப் பாடிய கதை என்ன?

25. தொகைத் தொடர் என்றால் என்ன? சான்று தருக.

26. எதுகை மோனை இலக்கண அழகுகளில் அமைந்துள்ள விடுகதைகள் இரண்டினை எழுதுக.

27. சொல்லணி என்றால் என்ன? சான்று தருக.

**V. ஐந்து அல்லது ஆறு தொடரில் விடை தருக : 4 x 3 = 12**

28. ஓசோன் படலத்தைப் பாதுகாக்க நாம் கடைப்பிடிக்க வேண்டுவன யாவை?

29. நாமக்கல் கவிஞர், இந்திய நாட்டுணர்ச்சியை எவ்வாறு எண்ணத்தில் கூட்டுகிறார்?

30. முன்னும் பின்னும் ஆடிக் கொண்டு தீப்பெட்டி ஒட்டும் பெண் குழந்தைகளின் நிலையை, கி.ராஜநாராயணன் எவ்வாறு விளக்குகிறார்?

31. சமூகத்தில் மக்கள் ஆற்ற வேண்டிய கடமைகளை புறநானூற்றுப் புலவர் எவ்வாறு எடுத்துரைக்கின்றார்?

**VI. குறிப்பு வரைக : 2 x 3 = 6**

32. திருக்குறள்

33. சேக்கிழார்

**VII. கீழ் வரும் அணியைச் சான்றுடன் விளக்குக. 1 x 3 = 3**

34. தற்குறிப்பேற்ற அணி

**VIII. இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக : 3 x 3 = 9**

**35.** ''மனிதன் மட்டும் மனிதன் மட்டும் ஏன் இப்படி''

**36.** ''பம்புசீர் வேழம் என்றேன் தின்னும் என்றாள்''

**37.** ''இன்று இரு பெருந்தகையர் வந்தனர் அதனால் தண்ணீர் தீர்ந்துவிட்டது.''

**IX. கீழ் வரும் பழமொழியை விளக்குக : 1 x 3 = 3**

**38.** 'ஞாயிற்றைக் கைமறைப்பார் இல்'

(அல்லது)

'தவளை தன் வாயால் கெடும்'

**X. அடிபிறழாமல் எழுதுக : 1 x 4 = 4**

**39.** ''முளிதயிர் பிசைந்த காந்தள்'' என வரும் குறுந்தொகைப் பாடல்

(அல்லது)

''சோதியாய்த் தோன்றும்'' என வரும் திருவாசகப் பாடல்.

**XI. எட்டு அல்லது பத்து தொடரில் விடை தருக : 2 x 4 = 8**

**40.** மனிதன் இயற்கைச் சமநிலையை எவ்வாறெல்லாம் கெடுக்கின்றான்?

**41.** இலங்காவித் தீவில் படகுச் சவாரியின் போது, காணக் கிடைக்கும் காட்சிகள் யாவை?

(அல்லது)

''உண்டாலம்ம இவ்வுலகம்'' என்று இளம்பெரு வழுதி உரைக்கும் மாண்புறு கருத்துகள் யாவை?

**XII. கீழ் வரும் செய்யுளை விளக்கி எழுதுக: 1 x 4 = 4**

**42.** ''செல்லல் நீங்கப் பகல் வித்திய செந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக் கொடு வந்தால் வல்லவாறு
அமுது ஆக்கலும் ஆகும்........

(அல்லது)

பசியால் மடிந்தார் படிக்கல் சுமந்தோர்
வதைத்துச் சிதைந்தோரும் என் மக்களே
கைகால் பிடிப்போர் கைகட்டிக் கொள்வோர்
அடிமையிலும் அடிமையப்பா என் மக்களே.

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக. 2 x 2 = 4**

குடும்பத்தில் உறுப்பினராக உள்ள ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். அதுதான் நல்ல குடும்பம். சிலர் உழைக்க, சிலர் உழைக்காமலே பிறர் உழைப்பின் பயனை உண்டு சோம்பலாக இருப்பதால் அது போற்றத்தக்க குடும்பம் ஆகாது. உலகம் பெரிய குடும்பம். எல்லாரும் உழைக்க வேண்டும். உழைக்காமல் உயிர் வாழும் எவர்க்கும் உரிமை இருக்கக் கூடாது. திருடன் உழைக்காமல் பிறருடைய உழைப்பைப் பெற்று வாழ்கிறான். அதனால் சமுதாயத்தால் வெறுக்கப் படுகிறான். எதிர்காலத்தில் உழைக்காமல் உயிர் வாழ்வோர் எவரும் அவ்வாறு வெறுக்கப் படுவார்கள். உடம்பால் கைகால்களால் உழைக்கலாம். அறிவால் மூளையால் உழைக்கலாம். சமுதாயத்தில் வாழ உரிமை பெற்றதற்காக எந்த வகையினலானாலும் உழைத்து அந்த உழைப்பைக் காணிக்கையாகத் தருதல் வேண்டும். உழைப்பில் உயர்வு, தாழ்வு கருதக் கூடாது. உயர்ந்த வேலை, தாழ்ந்த வேலை என்பதும் உழைப்பால் வேறுபாடு செய்வதும் எதிர்காலத்தில் குற்றமாகக் கொள்ளப்படும்.

**43. வினாக்கள்:**

(அ) உலகில் உழைத்து வாழ வேண்டும் என்பது எவ்வாறு வலியுறுத்தப் பட்டுள்ளது?

(ஆ) உழைப்பில் உயர்வு, தாழ்வு கருதக் கூடாது என்பது எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

**XIV. மடல் எழுதுக: 1 x 5 = 5**

**44.** உம் பள்ளியில் நடைபெற இருக்கும் இலக்கிய மன்ற நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்க வருமாறு பேராசிரியர் பூங்காவனம் அவர்களுக்கு அழைப்பு மடல் ஒன்று எழுதுக.

**(அல்லது)**

உம் தந்தை பத்தாம் வகுப்புத் தேர்வு எழுதப்போகும் உன்னை வாழ்த்தி எழுதுவது போன்று மடல் எழுதுக.

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு, இருபது வரிகளுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக. 1 x 5 = 5**

**45.** "ஆறு நடந்தால் ஊர் வளரும்"

**(அல்லது)**

இணையப் புரட்சியும், இன்றைய வாழ்வும்.

* * * *

## கருநாடக உயர்கல்வித் தேர்வு வாரியம்
## மல்லேசுவரம், பெங்களூரு

## மாதிரி வினாத்தாள் - 1

**பொருள்: முதன்மொழி தமிழ்** **குறியீட்டெண் : 10T**
**காலம்: 3.15 மணி** **மதிப்பெண்: 125**

**I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக 10 x 1 = 10**

**1. செய்யுளுக்கே உரிய சொல் -**

(அ) இடைச்சொல்
(ஆ) உரிச்சொல்
(இ) வடசொல்
(ஈ) திரிசொல்

**2. பிரிக்க முடியாதது, பிரித்தால் பொருள் தராதது -**

(அ) அடுக்குத் தொடர்
(ஆ) வேற்றுமைத் தொடர்
(இ) கழிபடர் கிளவி
(ஈ) இரட்டைக்கிளவி

**3. பகைவரின் மதிலை முற்றுகையிடும் போர்முறை -**

(அ) வெட்சி
(ஆ) வஞ்சி
(இ) உழிஞை
(ஈ) நொச்சி

**4. வினைத்தொகை -**

(அ) மண்வளம்
(ஆ) உறுமீன்
(இ) அழுகுரல்
(ஈ) கருங்குயில்

5. **விடுகதைக்கு அமைந்த வேறு பெயர் -**

(அ) வாய்ச்சொல்
(ஆ) அடைமொழி
(இ) பிசிர்
(ஈ) தொடர்கதை

6. **முரண் தொடரைக் குறிப்பிடுக -**

(அ) அழகழகு
(ஆ) அறிதிறன்
(இ) அங்குமிங்கும்
(ஈ) அலையலை

7. **ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்தவன்-**

(அ) பாரி
(ஆ) ஓரி
(இ) காரி
(ஈ) அதியமான்

8. **"வாய் + சொல்" சேர்த்து எழுதும் முறை -**

(அ) சொல்வாய்
(ஆ) வாசொல்
(இ) வாய்ச்சொல்
(ஈ) வாயில்சொல்

9. **'தா' என்பதன் பெயரெச்சம் -**

(அ) தந்தான்
(ஆ) தருவான்
(இ) தந்த
(ஈ) தரவான்

10. **ஆதிபுராணத்தை இயற்றியவர் -**

(அ) ஒன்னன்
(ஆ) ரன்னன்
(இ) பம்பன்
(ஈ) கம்பன்

## II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை நிரப்புக: 5 x 1 = 5

11. பாவேந்தர் : பாரதிதாசன்
தேசியகவி : __________

12. மன்னனால் சிறை வைக்கப்பட்டவள் : சீதை
மன்னனால் கோயில் கட்டப் பெற்றவள் : __________

13. கடி அரண் : உறுதி
கடி வேல் : __________

14. நான்கு சீர்களைக் கொண்டது : அளவடி
ஐந்து சீர்களைக் கொண்டது : __________

15. இளக்கன நூள் : இலக்கண நூல்
இயற்கையளகு : __________

## III. ஒரு தொடரில் விடை தருக: 8 x 1 = 8

16. இன்றைக்கு இருக்கும் பெரிய கவலையாக தென்கச்சியார் கூறுவது யாது?
17. நமது கல்வி எதனை முழுமையாக்கவில்லை என்கிறார் வைரமுத்து?
18. கண்ணகி சேரனின் மலையில் வந்து விண்புக காரணமென்ன?
19. யாரிடம் நட்பு கூடாது என்கிறது சிறுபஞ்ச மூலம்?
20. சங்கத் தலைவியின் முகம் மலரக் காரணம் என்ன?
21. மருதத் தச்சன் அமைத்தவை யாவை?
22. பசுவின் இயல்பு யாது?
23. பொருளிலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 15 x 2 = 30

24. பாரி என்னும் தமிழ்நாட்டு மன்னன் செய்த செயல் என்ன?
25. பெரிய உள்ளம், தாயுள்ளம் என்று பாரதிதாசன் யாருக்குப் புகழாரம் சூட்டுகிறார் ?
26. இலங்காவித் தீவில் ஆர்ச்சர் மீன் எவ்வாறு பயணிகளை மகிழ்விக்கின்றது?
27. ஆதி புராணத்தில் பம்பன் கூறும் சமணக் கருத்துகள் யாவை?
28. தாயின் உவகையை விளக்கும் குறள் யாது?

29. வண்ண மோதிரம் கண்ட சீதையின் நிலை யாது?

30. அம்மானை ஆடும் பெண்கள் சிவபெருமானின் திருவிளையாடல் குறித்துப் பாடிய கதை என்ன?

31. எதுகை, மோனை இலக்கண அழகுகளில் அமைந்துள்ள விடுகதைகள் இரண்டினை எழுதுக.

32. தொகைத் தொடர் என்றால் என்ன? சான்று தருக

33. சொல்லணி என்றால் என்ன?

34. நீதிசாரம் என்ற நூல் பற்றி எழுதுக.

35. சைக்காஸ் என்னும் தாவரங்களின் சிறப்பினை எழுதுக.

36. நிலக்கரி தரும் நன்மைகள் யாவை?

37. வேதநாதனின் தோற்றம் மிகச் சிறந்து காண்பதற்கான காரணம் பற்றி எழுதுக.

38. இரட்டைக்கிளவியை எடுத்துக் காட்டுடன் விளக்குக.

## V. ஐந்து அல்லது ஆறு தொடரில் விடை தருக : 6 x 3 = 18

39. ஓசோன் படலத்தைப் பாதுகாக்க நாம் கடைபிடிக்க வேண்டுவன யாவை?

40. முன்னும் பின்னும் ஆடிக்கொண்டு, தீப்பெட்டி ஒட்டும் பெண் குழந்தைகளின் நிலையை கி.ராஜநாராயணன் எவ்வாறு விளக்குகிறார்?

41. நாமக்கல் கவிஞர் இந்திய நாட்டுணர்ச்சியை எவ்வாறு எண்ணத்தில் கூட்டுகிறார்?

42. சமூகத்தில் மக்கள் ஆற்ற வேண்டிய கடமைகளை புறநானூற்றுப் புலவர் எவ்வாறு எடுத்துரைக்கின்றார்?

43. வெண்பாவின் பொது இலக்கணம் கூறுக.

44. ‘எங்கள் தமிழ் மொழி’ என்று பாரதிதாசன் பாராட்டும் சிறப்பினை எழுதுக

## VI. குறிப்பு வரைக : 2 x 3 = 6

45. திருக்குறள்

46. சேக்கிழார்

## VII. கீழ் வரும் அணியைச் சான்றுடன் விளக்குக. 1 x 3 = 3

47. தற்குறிப்பேற்ற அணி

VIII. **இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக :** 4 x 3 = 12

**48.** ''மனிதன் மட்டும் மனிதன் மட்டும் ஏன் இப்படி''

**49.** ''பம்புசீர் வேழம் என்றேன் தின்னும் என்றாள்.''

**50.** ''இன்று இரு பெருந்தகையர் வந்தனர் அதனால் தண்ணீர் தீர்ந்து விட்டது''

**51.** ''என்ன நுட்பம்! என்ன கைத்திறம்!''

IX. **கீழ் வரும் பழமொழியை விளக்குக :** 1 x 3 = 3

**52.** 'ஞாயிற்றைக் கைமறைப்பார் இல்'

(அல்லது)

'தவளை தன் வாயால் கெடும்'

X. **அடிபிறழாமல் எழுதுக :** 1 x 4 = 4

**53.** ''முளிதயிர் பிசைந்த காந்தள்'' என வரும் குறுந்தொகைப் பாடல்

(அல்லது)

''சோதியாய்த் தோன்றும்'' என வரும் திருவாசகப் பாடல்.

XI. **எட்டு அல்லது பத்து தொடரில் விடை தருக :** 2 x 4 = 8

**54.** மனிதன் இயற்கைச் சமநிலையை எவ்வாறெல்லாம் கெடுக்கிறான்?

**55.** இலங்காவித் தீவில் படகுச் சவாரியின் போது, காணக் கிடைக்கும் காட்சிகள் யாவை?

(அல்லது)

''உண்டாலம்ம இவ்வுலகம்'' என்று இளம்பெரு வழுதி உரைக்கும் மாண்புறு கருத்துகள் யாவை?

XII. **கீழ் வரும் செய்யுளை விளக்கி எழுதுக:** 1 x 4 = 4

**56.** ''செல்லல் நீங்கப் பகல் வித்திய செந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக் கொடு வந்தால் வல்லவாறு
அமுது ஆக்கலும் ஆகும்........

(அல்லது)

பசியால் மடிந்தார் படிக்கல் சுமந்தோர்
வதைத்துச் சிதைந்தோரும் என் மக்களே
கைகால் பிடிப்போர் கைகட்டிக் கொள்வோர்
அடிமையிலும் அடிமையப்பா என் மக்களே.

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக. 2 x 2 = 4**

குடும்பத்தில் உறுப்பினராக உள்ள ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். அதுதான் நல்ல குடும்பம். சிலர் உழைக்க, சிலர் உழைக்காமலே பிறர் உழைப்பின் பயனை உண்டு சோம்பலாக இருப்பதால் அது போற்றத்தக்க குடும்பம் ஆகாது. உலகம் பெரிய குடும்பம். எல்லாரும் உழைக்க வேண்டும். உழைக்காமல் உயிர் வாழும் எவர்க்கும் உரிமை இருக்கக் கூடாது. திருடன் உழைக்காமல் பிறருடைய உழைப்பைப் பெற்று வாழ்கிறான். அதனால் சமுதாயத்தால் வெறுக்கப் படுகிறான். எதிர்காலத்தில் உழைக்காமல் உயிர் வாழ்வோர் எவரும் அவ்வாறு வெறுக்கப் படுவார்கள். உடம்பால் கைகால்களால் உழைக்கலாம். அறிவால் மூளையால் உழைக்கலாம். சமுதாயத்தில் வாழ உரிமை பெற்றதற்காக எந்த வகையிலானாலும் உழைத்து அந்த உழைப்பை காணிக்கையாகத் தருதல் வேண்டும். உழைப்பில் உயர்வு, தாழ்வு கருதக் கூடாது. உயர்ந்த வேலை, தாழ்ந்த வேலை என்பதும் உழைப்பால் வேறுபாடு செய்வதும் எதிர்காலத்தில் குற்றமாகக் கொள்ளப்படும்.

**57. வினாக்கள் :**

**(அ)** உலகில் உழைத்து வாழ வேண்டும் என்பது எவ்வாறு வலியுறுத்தப் பட்டுள்ளது?

**(ஆ)** உழைப்பில் உயர்வு, தாழ்வு கருதக் கூடாது என்பது எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

**XIV. மடல் எழுதுக: 1 x 5 = 5**

**58.** உம் பள்ளியில் நடைபெற இருக்கும் இலக்கிய மன்ற நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்க வருமாறு பேராசிரியர் பூங்காவனம் அவர்களுக்கு அழைப்பு மடல் ஒன்று எழுதுக.

**(அல்லது)**

உம் தந்தை பத்தாம் வகுப்புத் தேர்வு எழுதப்போகும் உன்னை வாழ்த்தி எழுதுவது போன்று மடல் எழுதுக.

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு, இருபது வரிகளுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக. 1 x 5 = 5**

**59.** “ஆறு நடந்தால் ஊர் வளரும்”

**(அல்லது)**

“இணையப் புரட்சியும், இன்றைய வாழ்வும்.”

* * * *

# கருநாடக உயர்கல்வித் தேர்வு வாரியம்
## மல்லேசுவரம், பெங்களூரு

## மாதிரி வினாத்தாள் - 2

பொருள்: முதன்மொழி தமிழ் — குறியீட்டெண் : 10T

காலம்: 3 மணி — மதிப்பெண்: 100

I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக 6 x 1 = 6

1. இரண்டு சீர்களைக் கொண்டது -

(அ) சிந்தடி
(ஆ) குறளடி
(இ) அளவடி
(ஈ) நெடிலடி

2. "வள வள" எனப் பேசினாள் என்பதில் 'வள வள' என்பது -

(அ) இரட்டைக்கிளவி
(ஆ) அடுக்குத் தொடர்
(இ) திசைச் சொல்
(ஈ) திரி சொல்

3. "செம்மொழி" என்பது -

(அ) பண்புத்தொகை
(ஆ) வினைத்தொகை
(இ) உவமைத்தொகை
(ஈ) உம்மைத்தொகை

4. கடலும் கடலைச் சார்ந்த இடமும் -

(அ) குறிஞ்சி
(ஆ) முல்லை
(இ) மருதம்
(ஈ) நெய்தல்

5. **ஆசிரியப்பாவின் ஓசை -**

(அ) செப்பலோசை

(ஆ) அகவலோசை

(இ) கூவலோசை

(ஈ) பாடலோசை

6. **பகைவரின் மதிலை முற்றுகையிட்டு வெற்றி கொள்ளுதல் -**

(அ) வெட்சி

(ஆ) வஞ்சி

(இ) உழிஞை

(ஈ) காஞ்சி

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக: 4 x 1 = 4**

7. வேல் : பெயர்ச்சொல்

வெல் : __________

8. முல்லைக்குத் தேர் கொடுத்தவன் : பாரி

மயிலுக்கு போர்வை கொடுத்தவன் : __________

9. புறநானூற்றைப் படி - இரண்டாம் வேற்றுமை

நெல்லிக்கனி அரசனால் கொடுக்கப் பட்டது __________

10. வற்றல் உண்டான் : தொழிலாகு பெயர்

சிவப்பு உடுத்தினாள் : __________

**III. ஒரு தொடரில் விடை தருக: 7 x 1 = 7**

11. பூமி கோபப்படற அளவிற்கு மனிதன் செய்த தவறு என்ன?

12. இலட்சியமில்லாத வாழ்க்கைக்கு கவிப் பேரரசு வைரமுத்து கூறும் உவமை யாது?

13. "இமய வரம்பா, ஏனிந்த சீற்றம்" என்று கூறக் காரணமென்ன?

14. கொக்கின் செயலை உவமையாக்கி வள்ளுவர் கூறும் கருத்து யாது?

15. காளையின் கடனாகப் பொன்முடியார் கூறுவது யாது?

16. பாணனிடம், பாடினி "பூசும்" என்று எப்பொருள் குறித்துக் கூறினாள்?

17. நிலக்கரி இயக்கியும் தோற்றியும் வைப்பன யாவை?

## IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 10 x 2= 20

18. ஆசிரியர் திரு.வி.க. அவர்களை 'வானம்பாடி' என்று எவ்வாறு கூறுகிறார்?

19. "உண்டாலம்ம இவ்வுலகம்" என்ற புறநானூற்றுப் பாடல் எந்தக் குறளின் விளக்கமாக அமைந்து உள்ளது ?

20. பம்பன் வனவாசியின் மீது கொண்டிருந்த அன்பை எங்ஙனம் அறியலாம்?

21. விடுகதை எவ்வாறு ஒரு சிந்தனைக் கருவியாக விளங்குகிறது?

22. திருப்பெருந்துறை உறை சிவன் குறித்து மாணிக்கவாசகர் கூறுவன யாவை?

23. "தன்கேடு பிற்பகல் கண்டு விடும்" - விளக்குக.

24. "பட்டினி கிட" என்று ஈரோடு தமிழன்பன் கூறக் காரணமென்ன?

25. அடுக்குத்தொடரைச் சான்றுடன் விளக்குக?

26. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் கூறுக.

27. அணி என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?

## V. ஐந்து அல்லது ஆறு தொடரில் விடை தருக :4 x 3 = 12

28. வைரமுத்து இலட்சியங்களையும், தேர்ந்தெடுக்கும் துறைகளையும் எங்ஙனம் வேறுபடுத்துகிறார்?

29. கிராமத்து இளைஞர்களின் கனவுகளும் கற்பனைகளும் குறித்து கி.ராஜநாராயணன் அவர்கள் கூறுவன யாவை?

30. தூற்றின் கண் தூவிய வித்து போன்றவை எவை?

31. இனிது என்று கணவன் மகிழுமாறு தலைவி எங்ஙனம் சமைத்தாள்?

## VI. குறிப்பு வரைக : 2 x 3 = 6

32. பெரியபுராணம்

33. தென்கச்சி சுவாமிநாதன்

## VII. கீழ் வரும் அணியைச் சான்றுடன் விளக்குக. 1 x 3 = 3

34. வேற்றுப்பொருள் வைப்பு அணி

## VIII. இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக : 3 x 3 = 9

35. "உச்சி மலையிலே ஊறும் அருவிகள் ஒரே வழியிலே கலக்குது"

36. ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்.

37. ''அதிர்ச்சியிலும், ஆச்சரியத்திலும் உறைய வைக்கும் நாலாயிரம் மீன் வகைகள்.''

**IX. கீழ் வரும் பழமொழியை விளக்குக : 1 x 3 = 3**

38. 'முற்பகல் செயின் பிற்பகல் விளையும்'

(அல்லது)

'மின்னுவதெல்லாம் பொன்னல்ல'

**X. அடிபிறழாமல் எழுதுக : 1 x 4 = 4**

39. ''இனிமைத் தமிழ் மொழி எமது'' என வரும் மொழி வாழ்த்துப் பாடல்

(அல்லது)

''ஈன்று புறந்தருதல்'' என வரும் புறநானூற்றுப் பாடல்.

**XI. எட்டு அல்லது பத்து தொடரில் விடை தருக : 2 x 4 = 8**

40. பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கள் ''சொல்லின் செல்வர்'' என்பதை விளக்கும் நிகழ்ச்சி ஒன்றினை விளக்குக.

41. தீப்பெட்டித் தொழிற்சாலையில் இருந்து களைப்போடு வந்து நிற்கும் பேருந்தில் இருந்து இறங்கிய குழந்தைகளின் நிலையை விளக்குக.

(அல்லது)

வைரமுத்து அவர்கள், இலட்சியத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை எவ்வாறு வலியுறுத்துகின்றார்?

**XII. கீழ் வரும் செய்யுளை விளக்கி எழுதுக: 1 x 4 = 4**

42. சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை
உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

**(அல்லது)**

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிலில் பெண்கள் நடந்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக் கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி! .

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக. 2 x 2 = 4**

கல்லும், மண்ணும் தோன்றிய காலத்தே காடும் தோன்றியது. அதனை முல்லை நிலம் என முன்னோர்கள் பெயரிட்டு, அழைத்தனர். காட்சிக்கு இனியதாய் மரம் செடி கொடிகளால் பின்னிப் பிணைந்து, விண்ணை முட்டி மண்டிக் கிடப்பதே காடு. இதனை பாரதிதாசன்; ''வானிடை ஓர் வானடர்ந்தவாறு பெரு வண்கிளை மரங்கள் என்ன வீறு'' எனப் பாடி மகிழ்ந்தார். காடு நாகரிகத்தின் தாய்வீடு; இயற்கை அன்னையின் கொலு மண்டபம்; எழில் கருவூலம் எனக் காட்டினை அறிஞர் புகழ்வர். வளம் தரும் மூலிகைச் செடிகள் வளரும் இடமாகவும் விலங்குகளின் உறைவிடமாகவும் விளங்குகிறது காடு. மழை பெய்யாது கழியுமாயின் நீர்வளம் குன்றும். பயிர்த்தொழில் அழியும். பசியும் பட்டினியும் நாட்டினரை வாட்டும். இத்தகைய நிலை ஏற்படாதவாறு காப்பதும் காடுகளே - கரை புரண்டு வரும் காட்டாற்று வெள்ளத்தைக் கட்டுப்படுத்தி மண் அரிப்பைத் தடுத்து நிறுத்துவதும் காடுகளே! மண் வளத்தால் பெரும் பொருள் ஈட்டித் தரும் சந்தனம், தேக்கு, இரப்பர், மூங்கில் முதலிய மரங்கள் வானுற வளர்ந்திட நிலைக்களனாய்த் திகழ்வதும் காடுகளே.

**43. வினாக்கள் :**

**(அ)** காடுகளின் அமைப்பையும், சிறப்பையும், கவிஞரும், அறிஞரும் எவ்வாறு போற்றுவர்?

**(ஆ)** காடுகளால் விளையும் நன்மைகள் யாவை?

**XIV. மடல் எழுதுக: 1 x 5 = 5**

**44.** உம் பள்ளியில் நடைபெறும் அறிவியல் கண்காட்சியைக் காண வருமாறு மைசூரில் உள்ள உன் நண்பன் / தோழிக்கு மடல் ஒன்று வரைக

**(அல்லது)**

நீ வாழும் பகுதியில், பெருமழையால் முறிந்து கிடக்கும் மரங்களை அகற்றக் கோரி மாநகர ஆணையருக்குக் கடிதம் வரைக

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு, இருபது வரிகளுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக. 1 x 5 = 5**

**45.** ''மழைநீர் சேகரிப்போம் மண்வளம் காப்போம்''

**(அல்லது)**

அன்றாட வாழ்வில் அறிவியல்

* * * *

# கருநாடக உயர்கல்வித் தேர்வு வாரியம்
## மல்லேசுவரம், பெங்களூரு

## மாதிரி வினாத்தாள் - 2

**பொருள்: முதன்மொழி தமிழ்** **குறியீட்டெண் : 10T**
**காலம்: 3.15 மணி** **மதிப்பெண்: 125**

**I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக 10 x 1 = 10**

**1. இரண்டு சீர்களைக் கொண்டது -**

(அ) சிந்தடி
(ஆ) குறளடி
(இ) அளவடி
(ஈ) நெடிலடி

**2. 'வள வள' எனப் பேசினாள் என்பதில் 'வள வள' என்பது -**

(அ) இரட்டைக்கிளவி
(ஆ) அடுக்குத் தொடர்
(இ) திசைச்சொல்
(ஈ) திரிசொல்

**3. 'செம்மொழி' என்பது -**

(அ) பண்புத்தொகை
(ஆ) வினைத்தொகை
(இ) உவமைத்தொகை
(ஈ) உம்மைத்தொகை

**4. கடலும் கடலைச் சார்ந்த இடமும் -**

(அ) குறிஞ்சி
(ஆ) முல்லை
(இ) மருதம்
(ஈ) நெய்தல்

**5. ஆசிரியப்பாவின் ஓசை -**

(அ) செப்பலோசை
(ஆ) அகவலோசை
(இ) தூவலோசை
(ஈ) பாடலோசை

**6. பகைவரின் மதிலை முற்றுகையிட்டு வெற்றி கொள்ளுதல் -**

(அ) வெட்சி
(ஆ) வஞ்சி
(இ) உழிஞை
(ஈ) காஞ்சி

**7. 'இணையடி' பிரிக்கும் முறை -**

(அ) இ + அடி
(ஆ) இணை + யடி
(இ) இணை + அடி
(ஈ) அணை + அடி

**8. 'தோற்றம்' என்பதன் எதிர்ச்சொல் -**

(அ) உணர்வு
(ஆ) ஏற்றம்
(இ) மாற்றம்
(ஈ) மறைவு

**9. தும்மிக் கொண்டே இருமலுக்கு மருந்து கொடுப்பவர் -**

(அ) மருத்துவர்
(ஆ) பொறியாளர்
(இ) தொழிலாளர்
(ஈ) ஆசிரியர்

**10. 'கற்றல்' என்பது -**

(அ) வினையெச்சம்
(ஆ) பெயரெச்சம்
(இ) தொழிற்பெயர்
(ஈ) திசைப்பெயர்

## II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக: 5 x 1 = 5

11. வேல் : பெயர்ச்சொல்
    வெல் : __________

12. முல்லைக்குத் தேர் கொடுத்தவன் : பாரி
    மயிலுக்குப் போர்வை கொடுத்தவன் : __________

13. புறநானூற்றைப் படி : இரண்டாம் வேற்றுமை
    நெல்லிக்கனி அரசனால் கொடுக்கப்பட்டது : __________

14. வற்றல் உண்டான் : தொழிலாகு பெயர்
    சிவப்பு உடுத்தினாள் : __________

15. கற்றேன் : தன்வினை
    கற்பித்தேன் : __________

## III. ஒரு தொடரில் விடை தருக: 8 x 1 = 8

16. பூமி கோபப்படற அளவிற்கு மனிதன் செய்த தவறு என்ன?
17. இலட்சியமில்லாத வாழ்க்கைக்கு கவிப்பேரரசு வைரமுத்து கூறும் உவமை யாது?
18. “இமயவரம்பா, ஏனிந்த சீற்றம்” என்று கூறக் காரணமென்ன?
19. கொக்கின் செயலை உவமையாக்கி வள்ளுவர் கூறும் கருத்து யாது?
20. காளையின் கடனாகப் பொன்முடியார் கூறுவது யாது?
21. பாணனிடம், பாடினி “பூசும்” என்று எப்பொருள் குறித்துக் கூறினாள்?
22. நிலக்கரி இயக்கியும், தோற்றியும் வைப்பன யாவை?
23. விடுகதைகளைக் கொண்டு எவற்றை அறிய முடியும்?

## IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 15 x 2= 30

24. ஆசிரியர், திரு.வி.க. அவர்களை ‘வானம்பாடி’ என்று எவ்வாறு கூறுகிறார்?
25. “உண்டாலம்ம இவ்வுலகம்” என்ற புறநானூற்றுப் பாடல் எந்தக் குறளின் விளக்கமாக அமைந்து உள்ளது?
26. பம்பன் வனவாசியின் மீது கொண்டிருந்த அன்பை எங்ஙனம் அறியலாம்?
27. விடுகதை எவ்வாறு ஒரு சிந்தனைக் கருவியாக விளங்குகிறது?

28. திருப்பெருந்துறை உறை சிவன் குறித்து மாணிக்கவாசகர் கூறுவன யாவை?

29. ''தன் கேடு பிற்பகல் கண்டு விடும்'' விளக்குக.

30. ''பட்டினி கிட'' என்று ஈரோடு தமிழன்பன் கூறக் காரணமென்ன?

31. அடுக்குத்தொடரைச் சான்றுடன் விளக்குக.

32. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் கூறுக.

33. அணி என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?

34. இறந்த காலம் பற்றி வைரமுத்து கூறுவது யாது?

35. ஆரிய மன்னர்கள் தமிழ் நாட்டரசர்களை எவ்வாறு பழித்தனர்?

36. பாண்டியனால் மதுரைச் சொக்கநாதன் பிரம்படி பட்டது ஏன்?

37. பொருந்தா இயல்புடைய இரண்டு உயிர்கள் யாவை?

38. செய்யுள் உறுப்புகள் யாவை?

**V. ஐந்து அல்லது ஆறு தொடரில் விடை தருக :6 x 3 = 18**

39. வைரமுத்து இலட்சியங்களையும், தேர்ந்தெடுக்கும் துறைகளையும் எங்ஙனம் வேறுபடுத்துகிறார்?

40. கிராமத்து இளைஞர்களின் கனவுகளும் கற்பனைகளும் குறித்து, கி.ராஜநாராயணன் அவர்கள் கூறுவன யாவை?

41. தூற்றின் கண் தூவிய வித்து போன்றவை யாவை?

42. இனிது என்று கணவன் மகிழுமாறு தலைவி எங்ஙனம் சமைத்தாள்?

43. பாரதிதாசன் யாருக்கு என்ன புகழாரம் சூட்டுகிறார்?

44. அடுக்குத் தொடருக்கும், இரட்டைக் கிளவிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

**VI. குறிப்பு வரைக : 2 x 3 = 6**

45. பெரியபுராணம்

46. தென்கச்சி சுவாமிநாதன்

**VII. அணியைச் சான்றுடன் விளக்குக. 1 x 3 = 3**

47. வேற்றுப்பொருள் வைப்பு அணி

**VIII. இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக : 4 x 3 = 12**

48. ''உச்சி மலையிலே ஊறும் அருவிகள் ஒரே வழியிலே கலக்குது''

49. “ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்.”

50. “அதிர்ச்சியிலும், ஆச்சரியத்திலும், உறைய வைக்கும் நாலாயிரம் மீன் வகைகள்”

51. “இவர்கள் மீது வெயில் பட்டுப் பல வருடங்கள் ஆகின்றன.”

## IX. கீழ் வரும் பழமொழியை விளக்குக : 1 x 3 = 3

52. ‘முற்பகல் செயின் பிற்பகல் விளையும்’

**(அல்லது)**

‘மின்னுவதெல்லாம் பொன்னல்ல’

## X. அடிபிறழாமல் எழுதுக : 1 x 4 = 4

53. “இனிமைத் தமிழ் மொழி எமது” என வரும் மொழி வாழ்த்துப் பாடல்

**(அல்லது)**

“ஈன்று புறந்தருதல்” என வரும் புறநானூற்றுப் பாடல்.

## XI. எட்டு அல்லது பத்து தொடரில் விடை தருக : 2 x 4 = 8

54. பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கள் “சொல்லின் செல்வர்” என்பதை விளக்கும் நிகழ்ச்சி ஒன்றினை விளக்குக.

55. தீப்பெட்டித் தொழிற்சாலையில் இருந்து களைப்போடு வந்து நிற்கும் பேருந்திலிருந்து இறங்கிய குழந்தைகளின் நிலையை விளக்குக.

**(அல் லது)**

வைரமுத்து அவர்கள் இலட்சியத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை எவ்வாறு வலியுறுத்துகிறார்?

## XII. கீழ் வரும் செய்யுளை விளக்கி எழுதுக: 1 x 4 = 4

42. சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை
உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

**(அல்லது)**

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிலில் பெண்கள் நடந்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக் கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி!

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக. 2 x 2 = 4**

கல்லும், மண்ணும் தோன்றிய காலத்தே காடும் தோன்றியது. அதனை முல்லை நிலம் என முன்னோர்கள் பெயரிட்டு, அழைத்தனர். காட்சிக்கு இனியதாய் மரம் செடி கொடிகளால் பின்னிப் பிணைந்து, விண்ணை முட்டி மண்டிக் கிடப்பதே காடு. இதனை பாரதிதாசன்; ''வானிடை ஓர் வானடர்ந்தவாறு பெரு வண்கிளை மரங்கள் என்ன வீறு'' எனப் பாடி மகிழ்ந்தார். காடு நாகரிகத்தின் தாய்வீடு; இயற்கை அன்னையின் கொலு மண்டபம்; எழில் கருவூலம் எனக் காட்டினை அறிஞர் புகழ்வர். வளம் தரும் மூலிகைச் செடிகள் வளரும் இடமாகவும் விலங்குகளின் உறைவிடமாகவும் விளங்குகிறது காடு. மழை பெய்யாது கழியுமாயின் நீர்வளம் குன்றும். பயிர்த்தொழில் அழியும். பசியும் பட்டினியும் நாட்டினரை வாட்டும். இத்தகைய நிலை ஏற்படாதவாறு காப்பதும் காடுகளே - கரை புரண்டு வரும் காட்டாற்று வெள்ளத்தைக் கட்டுப்படுத்தி மண் அரிப்பைத் தடுத்து நிறுத்துவதும் காடுகளே! மண் வளத்தால் பெரும் பொருள் ஈட்டித் தரும் சந்தனம், தேக்கு, இரப்பர், மூங்கில் முதலிய மரங்கள் வானுற வளர்ந்திட நிலைக்களனாய்த் திகழ்வதும் காடுகளே.

**57. வினாக்கள்:**

(அ) காடுகளின் அமைப்பையும், சிறப்பையும், கவிஞரும், அறிஞரும் எவ்வாறு போற்றுவர்?

(ஆ) காடுகளால் விளையும் நன்மைகள் யாவை?

**XIV. மடல் எழுதுக: 1 x 5 = 5**

**58.** உம் பள்ளியில் நடைபெறும் அறிவியல் கண்காட்சியைக் காண வருமாறு மைசூரில் உள்ள உன் நண்பன் / தோழிக்கு மடல் ஒன்று வரைக

**(அல்லது)**

நீ வாழும் பகுதியில், பெருமழையால் முறிந்து கிடக்கும் மரங்களை அகற்றக் கோரி மாநகர ஆணையருக்குக் கடிதம் வரைக

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு, இருபது வரிகளுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக. 1 x 5 = 5**

**59.** ''மழைநீர் சேகரிப்போம் மண்வளம் காப்போம்''

**(அல்லது)**

அன்றாட வாழ்வில் அறிவியல்

* * * *